අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk


මගේ යොමුව / எனது இல. / My Ref.: ED/01/21/03/1(4)

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.:

දිනය / திகதி / Date: 2018.05.23

சுற்றறிக்கை இலக்கம் - 21/2018

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல அதிபர்கள்,

**பாடசாலை ஆசிரியர்களுக்காக கர்ப்பிணிக் காலத்திற்குப் பொருத்தமான ஆடையினை அறிமுகப்படுத்தல்.**

பாடசாலை முறைமையில் தற்போது கற்றல் கற்பித்தல் பணிகளில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் 236,000 மாத்திரம் ஈடுபட்டுள்ளதுடன், இவர்களில் 172,000 ஆசிரியைகள் உள்ளனர். வருடாந்தம் சுமார் 10,000 ஆசிரியைகள் மகப்பேற்று விடுமுறையில் செல்கின்றனர்.

ஆசிரியர் தொழில் கௌரவமிக்க தொழிலாகக் கருதப்படுகின்றது. நாட்டின் எதிர்கால சந்ததியினரை நற்பிரஜைகளாக மாற்றியமைப்பதற்காக முன்மாதிரியாகச் செயற்படுவதற்கு ஆசிரியர்கள் அர்ப்பணிப்புச் செய்துள்ளனர். இதனால் ஆடைகள் ஆசிரியர் தொழிலின் கௌரவத்தை பாதுகாக்கும் முக்கிய அம்சமாக கருதப்படுகின்றது. ஆசிரியைகள் கர்ப்பிணிக் காலத்திலும் தமது தொழில்சார் கௌரவம், சம்பிரதாயம் மற்றும் கலாசாரத்தைப் பாதுகாக்கக்கூடிய வகையில் ஆடை அணிகலங்களைப் பயன்படுத்த ஆர்வம் காட்டுகின்றனர்.

இருப்பினும் கர்ப்பிணிக் காலத்தில் இறுதி ஒரு சில மாதங்களுக்குள் ஏற்படக்கூடிய உடல்சார்ந்த சிரமங்கள் தொடர்பில் கருத்திற் கொள்ளும் போது வசதியான ஆடையினை அணிவது மிகவும் பொருத்தமானதாகும். கர்பிணிக் காலத்தில் மிகவும் வினைத்திறனைப் போன்று உற்பத்தித்திறன் மிக்க சேவையினை வழங்குவதற்காகப் பொருத்தமான வகையில் தொழிலின் கௌரவத்திற்கு பாதிப்புக்கள் ஏற்படாத இலகுவான ஆடைகளை அறிமுகப்படுத்துவது நோக்கமாகும்.

அத்துடன் இந்த ஆடை கட்டாயமல்ல என்பதுடன், கர்ப்ப காலத்தில் ஆசிரியைகளின் விருப்பத்திற்கமையப் பயன்படுத்த முடியும்.

கீழ்க் குறிப்பிடப்பட்ட பிரிவுகளை உள்ளடக்கக்கூடியவாறு ஆடைகள் தயாரிக்கப்பட வேண்டியதுடன், இதற்குப் புறம்பாக பல்வேறுபட்ட அலங்கார வடிவமைப்புக்களை இடமுடியாது.

1. ஆடையின் உள்ளடக்க இடைவெளி (SPACE AND VOLUME)

   கர்பகாலத்தில் கிரமமாக அதிகரிக்கும் வயிற்றின் அளவினைக் காரணமாகக் கொண்டு ஆடையின் பின்பக்கத்திற்கு இணைவாக முன்பக்கத்திலும் சமநிலைமை குறைவடைந்து செல்கின்றது. இதனால் ஆடையின் சமநிலையைப் பாதுகாப்பதற்காக மேலதிக இடைவெளி (Extra Volume) ஆடையில் இணைக்கப்பட வேண்டும். இம் மேலதிக இடைவெளியினைப் பேணுவதைப் போன்று ஆடைக்கு அலங்காரத்தையும் வழங்குவதற்காக ஆடைக்கு தடிப்பான பட்டியினை இடவேண்டும்.

2. அளவு உயரம்

ஆடையினை இலகுவான முறையில் செயற்படுத்துவதற்காகவும், தொழில்சார் கௌரவத்தைப் பாதுகாப்பதற்காகவும் முழுங்காலிலிருந்து கீழாக கெண்டைக் கால் வரை உயரத்திற்கு இருக்க வேண்டும்.

பெண்களின் உடலில் அலங்காரத்தைக் காண்பிக்க பிரதான காரணியாக அமைவது உயரமாகும். கற்பிணிக் காலத்தில் விரிவடையும் வயிற்றிற்கு இணைவாக உடம்பின் உயரம் குறைவாகத் தென்படுகின்றது. எனவே வயிற்றுக்கு குறுக்காகச் செல்லும் நேர் வரைவு வடிவமைப்பு கொண்ட பொக்ஸ்பிளீட் (Box Pleat) ஒன்றை இடவேண்டும்.

3. தோள்பட்டையைப் போதியளவு மூடுதல்.

கற்ப காலத்தில் கிரமமாக அதிகரிக்கும் வயிறு மற்றும் நெஞ்சுப் பகுதியின் அளவு பெண்களின் உடல் அமைப்பில் பாரிய மாற்றங்களுக்கு உட்படுகின்றது. இதனால் தோள்பட்டையினைப் போதியளவு இருப்பினும் அழகான முறையில் மூடக்கூடியவாறு அழகான கொளர் இடவேண்டியதுடன் இந்த கொளர் பின்பக்கம் வரை இணைப்பினைக் கொண்டதாக இருக்க வேண்டும். கொளர் "பின்டக்ஸ்" (Pin tucks) என்ற அடிப்படையில் கொளரின் மேற்பக்கத்தில் தையல் (Texture) இடுவது மிகப் பொருத்தமானதாகும்.

4. ஆடையின் வெளித் தோற்ற அலங்காரம்

அ) நிற வகை - இலங்கை வெப்பமண்டல வலய நாடு என்பதுடன் பெரும்பான்மையான மக்களின் தோலின் நிறம் கபில நிறத்துக்கு சமமானதாகும். இதனால் நிறத்தினைக் காண்பிக்கக்கூடிய வகையிலான நிறங்களைத் தேர்ந்தெடுப்பது பொருத்தமானதாகும். இதற்காக இளம் பச்சை நிற வகையும், இள மண் நிற வகைகளையும் இளம் செம்மஞ்சள் நிறத்தை அல்லது வெள்ளை / சாம்பல் நிறத்தைப் பயன்படுத்த வேண்டும்.

ஆ) பொருத்தமான துணி வகை - இவ் ஆடைக்காக சிறிய நிறைகொண்ட இலகுவான பட்டுக்கலந்த சலேஞ்சர், விஸ்கோஸ் போன்ற துணி வகைகளைத் தேர்ந்தெடுப்பது பொருத்தமானதாகும். இந்தத் துணி இரண்டிற்கும் உடலை மறைக்கக்கூடிய இயலுமை (Draperbilify) இருப்பதனால் ஆடைக்கு உரிய வடிவத்தைக் கொடுத்துத் தைப்பதற்கு வசதியான இருப்பதற்கும், அதனை அணிவதற்கும் வசதியாகவும் இருப்பதும் இந்த துணி வகை மிகவும் பொருத்தமானதாகும்.

இ) கழுத்து வடிவம் - வசதி, அலங்காரம் மற்றும் ஒழுக்க விழுமியம் தொடர்பில் கவனம் செலுத்தி நீளமற்ற அகலமான வட்ட வடிவில் இடப்பட வேண்டும்.

ஈ) ஆடையின் கைகளை இடல் - கை வைப்பது கட்டாயமாகும். உடம்பின் உயரத்தைக் காண்பிக்கக்கூடிய வகையில் குறுக்காக செல்லக்கூடிய வகையில் பொக்ஸ்பிளீட் (Box Pleat) இட்டு அழகுபடுத்தக்கூடியவாறு கையின் உயரம் அதற்கிணைவாக இருக்க வேண்டும். இது தோள்பட்டையின் முனையில் (Shoulder Point) சிறிய மடிப்புக்கள் மூன்று கொண்டதாக கிரமமாக முழங்கை வரை செல்லக்கூடிய வகையில் இலகுவாக மற்றும் சௌவ்கரியம்மிக்கதாக தைக்க வேண்டும். (Log Off Mutton Sleeve)

உ) ஆடையின் பின்பகுதி - ஆடையின் பின்பகுதியில் வடிவமைப்புடன் அழகுபடுத்துவது ஆடைக்கு சிறந்த வடிவமைப்பை வழங்குவதைப் போன்று அணிவதற்கும் இலகுவாக அமைகின்றது. நடுப்பகுதி ஊடாக செல்லும் (Centre Back) வெளியே காணாத வகையில் சிபர் (Invisible Zipper) இட வேண்டும்.

5. **ஆடையின் உட்பகுதி**

ஆடையின் வடிவமைப்பினை முறையாகப் பேணுவதற்காகவும் வெளியே தென்படுவதைத் தடுப்பதற்காகவும் உட்பகுதியில் முழுமையாக லைனிங் இடுவது அத்தியாவசியமாகும். இதற்காக பட்டாடையினைப் பயன்படுத்துவது பொருத்தமானதாகும். இதன் மூலம் வியர்வையினை உறிஞ்சிக் கொள்ளக்கூடிய வசதிகள் காணப்படுவதுடன் கற்பிணிப் பெண்ணுக்கு வசதியாகவும் அமைகின்றது.


6. **ஆடையின் ஒரு பகுதியாக காற்சட்டையினைப் பயன்படுத்தல்.**


சிங்களம், தமிழ், முஸ்லிம், வோ்கா் போன்ற பல்வேறுபட்ட இனத்தவா்களைப் போன்று பௌத்த, கிருஸ்தவ, இந்து, இஸ்லாம் போன்ற பல்வேறுபட்ட சமயங்களைப் பின்பற்றக்கூடிய ஆசிரியா்கள் கல்வித் துறையில் சேவையாற்றுகின்றனா். இருப்பினும் காற்சட்டை அத்தியாவசியாக அமைவதில்லை என்பதுடன் இனங்களுக்கமைய மற்றும் சமயங்களுக்கமைய தேவையானோருக்கு இதனைப் பயன்படுத்த வாய்ப்புக்கள் உள்ளன. இது எவ்வாறாக இருப்பினும் உடல் ரீதியிலான வசதிகளுக்கமைய இதனை அமைத்துக் கொள்ள வேண்டும்.

இவ் ஆடை தைக்கப்பட வேண்டிய முறை இணைப்பில் காண்பிக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக பயன்படுத்துவதற்காக வழிகாட்டல்களின் தேவைகளுக்கமைய பயன்படுத்துவதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்துவது அதிபரின் பொறுப்பாகும். இது கற்ப காலத்தில் ஏற்படக்கூடிய சிரமங்களைத் தவிர்த்து வசதியுடன் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்காக வழங்கப்படும் சலுகையாக அமையும் என்பதை தயவாய் அறிவிக்கிறேன்.

சுனில் ஹெட்டிஆரச்சி
செயலாளா்
கல்வி அமைச்சு

Annexure 01





Annexure 02
















Detail Drawings    Annexure 03




Detail Drawings — Annexure 03 - A



Detail Drawings

Annexure 04


Front



Detail Drawings

Annexure 04 - A


Back



Annexure 05


Detail Drawings

Front




Detail Drawings Annexure 05-A

Back





Lining attaching
Details at bottom hem



Detail Drawings Annexure 06


Front




Detail Drawings

Annexure 06 - A

Back




Detail Drawings Annexure 07



Detail Drawings


Annexure 07 - A

Back



Detail Drawings Annexure 08

Collor Details



Detail Drawings Annexure 08 - A

## Collor Details

